சார்பு நீதிமன்றம், விருதுநகர்

M.C.O.P.No: 40/2021 Date: 06.10.2025

எதிர்மனுதாரரின் தரப்பு சாட்சி–1(R.W.1) வாக்குமூலம் (1872 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144 வது பிரிவின்படி திரு.சம்சுல் ஆரிப், கிரேடு –2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தாமஸ்செல்வகுமார் | சாதி | : | |
| த/பெ | : | தாமஸ் அந்தோணி | சமயம் | : | |
| கிராமம் | : | ஆயன்குளம் | தொழில் | : | |
| தாலுகா | : | திருநெல்வேலி | வயது | : | 48 |

<u>முதல் விசாரணை –</u>

**1.** நான் 2 ம் எதிர்மனுதாரர் காப்பீட்டு நிறுவனத்தில் கிளை மேலாளராக பணியாற்றி வருகிறேன். எங்கள் தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்கமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு விபத்து தேதியில் காப்பீடு இருப்பதை கணினியின் மூலம் தேடப்பட்ட அலுவலக நகல் **எ.ம.சா.ஆ.1.** 18.10.2024 ம் தேதி 2 ம் எதிர்மனுதாரர் 1 ம் எதிர்மனுதாரர் மீது விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு ஆன்லைன் மூலம் அனுப்பிய புகார் மனு அலுவலக நகல் **எ.ம.சா.ஆ.2**. 18.10.2024 ம் தேதி ஆமத்தூர் காவல் ஆய்வாளருக்கு ஆன்லைன் மூலம் அனுப்பிய புகார் மனு அலுவலக நகல் **எ.ம.சா.ஆ.3.** எங்கள் காப்பீட்டு நிறுவனத்தால் வழங்கப்படும் குறிப்பாணை அலுவலக நகல் **எ.ம.சா.ஆ.4.** (**எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள்** உண்மையான ஆவணங்கள் இல்லை என மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). மனுவை தள்ளுபடி செய்ய

வேண்டுகிறேன்.

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

**2.** நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் அலுவலக நகல் என்றால் சரிதான். மேற்படி எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களின் உண்மை நகல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் கணினியில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டது என்றால் சரிதான். கணினியில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டிருந்தால் மேற்படி ஆவணங்களில் பதிவிறக்கம் செய்யப்பட்ட தேதி மற்றும் நேரம் குறிப்பிடப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சான்றிதழ் மற்றும் அபிடவிட் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**3.** எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. மின்னணு சம்மந்தமான ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு சாட்சிய சட்டத்தின் படி சான்றிதழ் பெற்று தாக்கல் செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 மோட்டார் வாகன ஆய்வறிக்கை காலம்–10 ல் 26.11.2020 முதல் 25.11.2021 வரை மேற்படி வாகனம் எங்கள் காப்பீட்டு நிறுவனத்தில் மேற்படி வாகனம் காப்பீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், மேற்படி காப்பீடு போலியானது என எங்கள் நிறுவனத்தால் புகார் செய்யப்பட்டுள்ளது. காப்பீட்டை மோட்டார் வாகன ஆய்வாளர் முறையாக ஆய்வு செய்த பின்னர் தனது அறிக்கையை

அது குறித்து குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. எங்கள் நிறுவனத்தின் சார்பாக விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மற்றும் ஆமத்துார் காவல் ஆய்வாளரிடம் புகார் மனு கொடுத்ததாக சொல்வது குறித்து விசாரணை எதுவும் நடைபெற்றதா என்றால் விசாரிக்கவில்லை. நாங்கள் கொடுத்த புகார் பொய்யானது என்பதால் அதன் மீது போலிசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

**4.** புகார் மனு கொடுத்து சுமார் 1 வருடத்திற்கு மேல் ஆகிறது என்றால் சரிதான். புகாரின் மீது 1 வருடத்திற்கு மேலாக நடவடிக்கை எடுக்காதது குறித்து மேல்நடவடிக்கை எடுத்தோமா என்றால் தலைமை அலுவலகத்தால் மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மனுதாரருக்கு இழப்பீடு வழங்கக்கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களை போலியாக உற்பத்தி செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் காப்பீடு போலியாக தயார் செய்யப்பட்டது என்பதற்கு எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம்.